www.freetnbooks.com

T

Reg. No.: | | | | | | |

# இரண்டாம் பருவப் பொதுத் தொகுத்தறித் தேர்வு–2025

## வகுப்பு - 6

## தமிழ்

காலம் : 2.00 மணி

மதிப்பெண்கள்:60

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 x 1 = 10

1. நானிலம் படைத்தவன் பாடலை எழுதியவர் ......
   அ) முடியரசன் ஆ) கண்ணதாசன் இ) பாரதிதாசன் ஈ) பாரதியார்
2. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் .........
   அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி
3. 'உதித்த' என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் ........
   அ) நிறைந்த ஆ) குறைந்த இ) மறைந்த ஈ) தோன்றிய
4. பிறரிடம் நான் ......... பேசுவேன்.
   அ) கடுஞ்சொல் ஆ) இன்சொல் இ) வன்சொல் ஈ) கொடுஞ்சொல்
5. பழையன கழிதலும் .........
   அ) புதியன ஆ) புதுமை இ) புதிய இ) புதுமையான
6. நிலையான செல்வம் ........
   அ) தங்கம் ஆ) பணம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

ஆ) பாடல் வரிகளுக்கு ஏற்பப் பொருத்துக.

7. விடிவெள்ளி – பஞ்சுமெத்தை
8. மணல் – ஊஞ்சல்
9. புயல் – போர்வை
10. பனிமூட்டம் – விளக்கு

இ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளிக்க. 5 x 2 = 10

11. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?
12. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?
13. தமிழன் எதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான்?
14. ஆக்கம் யாரிடம் வழி கேட்டுச் செல்லும்?
15. இன எழுத்துகள் என்றால் என்ன?
16. பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டுத் தருக.
17. கண்மணியே கண்ணுறங்கு - பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?

ஈ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடையளிக்க. 3x4='

18. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?
19. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்துகள் யாவை?
20. பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் யாவை?
21. தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?
22. காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?

Scanned with Cam

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



உ) அடிபிறழாமல் எழுதுக. 2 x 2 = 4

23. 'சொல்லுக...' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

24. 'விருந்து...' என முடியும் திருக்குறளை எழுதுக.

ஊ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 12 x 1 = 12

25. நட்பு என்னும் தலைப்பில் கவிதையைத் தொடர்க.
இன்பம் கொடுப்பது நட்பு
.......... அளிப்பது நட்பு
.......... .......... நட்பு

26. தொடரை நீட்டி எழுதுக.
(எதையும், காரணத்துடன்)
அறிந்து கொள்ள விரும்பு

27. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம் பெறாத சொல் இரண்டு எழுதுக.
..............., ..............

28. அகரவரிசைப்படுத்தி எழுதுக.
வைரம், நீலம், கோமேதகம், மாணிக்கம்

29. பிழையைத் திருத்தி எழுதுக.
ஒரு இரவும், ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்

30. கீழ்க்கண்ட தொழிலோடு தொடர்புடைய இரண்டு சொற்களை எழுதுக.
உழவுத் தொழில், ............ , ...........

31. படித்ததை எழுதுக.
Adulteration
Palace

32. பிரித்து எழுதுக.
1) நன்றியறிதல் 2) மூச்சடக்கி

33. சேர்த்து எழுதுக.
1) வணிகம்+ சாத்து 2) பொங்கல் + அன்று

34. பொருள் எழுதுக.
1) நட்டல் 2) சமர்

35. இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.
உள்ளுவது உயர்வுள்ளல் எல்லாம்
மற்றது தள்ளாமை தள்ளினும் நீர்த்து

36. தொடரில் அமைத்து எழுதுக.
சில்லறை

எ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க. 1 x 6 = 6

37. 'உழைப்பே மூலதனம்' என்னும் கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)
'அறிவுசால் ஔவையார்' என்னும் நாடகத்தை கதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

ஏ) ஏதேனும் ஒரு கடிதம் எழுதுக. 1 x 6 = 6

38. உங்கள் ஊரில் நடைபெறும் மரபுச் சந்தையைக் காண வருமாறு தோழி/தோழனுக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)
பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றதற்குப் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

Scanned with Cam

www.freetnbooks.com | FREETNBOOKS